13.03.2024

**OS. 242 / 2023 வா. சா. 1. வெள்ளைச்சாமி , த/பெ. மெய்யப்பன்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

தற்போத எனக்கு அறந்தாங்கியில் உள்ள S.B.I வங்கி கணக்கினை சொல்லமுடியுமா என்றால் ஞாபகமில்லை. அது தொடர்பான வங்கி கணக்கு புத்தகத்தினை எனக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஆட்சேபனை உண்டா என்றால் இல்லை. அந்த வங்கி கணக்கில் மீதக் கிரைய தொகையான ரூ.5 லட்சம் எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. என் வங்கி கணக்கிற்கு அந்த ரூ. 5 லட்சம் எந்த தேதியில் வரவு வைக்கப்பட்டது என்றால் தெரியவில்லை. என் வங்கி கணக்கின் வரவு , செலவு கணக்கினை என்னால் தாக்கல் செய்ய இயலும் என்றால் நான் N.R.I ஆக இருந்தபோது இருந்த தகவலினை கொடுக்கமாட்டார்கள் ஆனால் தற்போதுள்ள N.R.I லிருந்து மாறிய பின் ஏற்பட்ட தகவலினை கொடுப்பார்கள். நான் வங்கி கணக்கு பெற்றுள்ளேன் என்ற முறையில் N.R.I யின் போது ஏற்பட்ட கணக்குப்பதிவினை பெறலாம் என்றால் நான் வெளிநாட்டில் இருந்ததால் கொடுக்கமாட்டார்கள். இந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் நான் வழக்கில் சொல்லியுள்ளது பொய் என தெரிந்துவிடும் என்பதற்காக தாக்கல் செய்ய இயலாது என கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் ரூ.5 லட்சம் வந்தது , அந்த ரூ.5 லட்சத்தினை நான் வங்கியிலிருந்து எடுத்தேன் என்பதற்கு எவ்வித ஆவணமும் என் கைவசம் உள்ளதா என்றால் நான் பணம் அனுப்பிய ரசீது கையில் இருந்தது. அதனை வழக்கில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் இருந்தது, தற்போது உள்ளதா என்று பார்க்க வேண்டும். ரூ.4 லட்சம் எவ்வாறு தயார் செய்யப்பட்டது என்றால் அது எங்கள் வீட்டில் இருந்த பணம். அந்த பணம் எவ்வாறு வந்தது என்றால் நான் சம்பாதித்து அனுப்பியதுதான். அதுவும் என் வங்கி கணக்கில் இருந்து எடுக்கப்பட்டதென்றால் சரிதான். எந்த தேதியில் ரூ.4 லட்சம் எடுக்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. நான் சொல்வதுபோல் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டதாக சொல்லப்பட்ட தேதியில் என் வசம் ரூ.4 லட்சம் இருந்ததில்லை என்றாலும், அதனை நான் பிரதிவாதி லெட்சுமியின் வசம் முன்தொகையாக கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி லெட்சுமியின் கணவர் பெயர் முத்து என்றால் சரிதான் , அவரும் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார். இந்த முத்துவை எனக்கு என் அக்கா செல்லம்மாள் மூலமாக தெரியும். இந்த முத்துவை எப்போதிருந்து தெரியும் என்றால் இடம் கொடுப்பதாக என் அக்காவிடம் சொல்லியதிலிருந்து தெரியும், அதன் தேதி தெரியுமா என்றால் பத்திரம்

செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பிலிருந்து தெரியும். வழக்கு சொத்தினை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துவிட்டுதான் முன்தொகை கொடுத்தேன். பிரதிவாதி லெட்சுமியும், அவரது கணவரும் குடியிருப்பது ஓட்டு வீடா என்றால் ஓட்டு வீடா, தார்சு வீடா என்று தெரியாது. மாட்டு கொட்டகை எந்த நீள வாக்கில் உள்ளது என்றால் ரோட்டிற்கு வடக்கில் உள்ளது. எவ்வளவு நீளமுள்ள மாட்டு கொட்டகையை விலை பேசினோம் என்றால் 5 மீட்டர் இருக்கும். அந்த மாட்டு கொட்டகை மேலே ஓடும், பக்கவாட்டில் திறந்த வெளியாக இருந்ததா என்றால் ஆமாம். அந்த மாட்டு கொட்டகை எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி இருந்தது என்றால் ரோட்டிற்கு பக்கவாட்டில் இருந்தது. எனக்கு ஓட்டு வீடு, தார்சு வீடு , மாட்டு கொட்டகைக்கு வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான், தற்போது நாங்கள் வாங்கிய இடத்தில் அவரது மகன் இருப்பதாக சொன்னார்கள், நான் சென்று பார்க்கவில்லை. அந்த இடத்திற்குள் ஏதேனும் போரோ, மின் இணைப்போ இருந்ததா என்றால் ஓட்டு கொட்டகைக்கு மின் இணைப்பு சர்வீஸ் எண் இருந்தது. வா.சாஆ1 கிரய ஒப்பந்த ஆவணத்தில் மங்களூர் ஓட்டு வீடு ஒன்று உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் உண்மையில் வழக்கு சொத்தினை கிரயம் பேசி கிரய ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் வழக்கு சொத்தின் உண்மையான பூஸ்திதி அமைப்பு எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும், வா.சாஆ1 கிரய ஒப்பந்த ஆவணம் பெயரளவில் ஜாமீனுக்காக என் அக்காவிற்கு ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. என் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பாரா 3–ல் கடந்த 2017–ம் ஆண்டு மே மாதம் முதல் பிரதிவாதியிடம் நேரிலும் , ஆட்கள் மூலமும் தெரிவித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2017 மே மாதத்திற்கு பிறகு ஏதேனும் பஞ்சாயத்து நடைபெற்றதா என்றால் பெரிய அளவில் பேசினோம் , ஆனால் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார். 2016, ஜுன் மாதத்திற்கு பிறகு வெளிநாடு எப்போது சென்றேன் என்றால் 2016 – 2017 க்கு இடையில் நான் வெளிநாடு சென்று வந்தேன். 20.06.2016 முதல் 19.06.2017 க்கு இடைப்பட்ட காலத்தில் நான் வெளிநாடு சென்று வந்தேனா என்றால் சென்று வந்தேன். அந்த இடைப்பட்ட காலத்தில் எத்தனை மாதங்கள் அங்கு இருந்தேன் என்றால் 4 முதல் 6 மாதங்கள் இருந்திருக்கலாம். அந்த காலகட்டத்தில் நான் வெளிநாட்டில் இருந்ததால் முத்துவை என்னால் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றால் சரியல்ல, நான் போன் மூலமாக தொடர்பு கொண்டேன், 4 ,5 முறை பேசியுள்ளேன். முத்துவின் போன் நம்பர் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. இந்த விபரங்களை வழக்குரையிலோ, என் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்றால் கேட்கவில்லை என்பதால் சொல்லவில்லை. எனது கடவுச்சீட்டின் சான்றிட்ட நகலினை இவ்வழக்கில் தாக்கல் செய்ய எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லையென்றால் சரிதான். முத்து சொத்தினை விற்கப்போகிறார் என்ற விபரத்தினை என் அக்கா என்னிடம் எப்போது சொன்னார் என்றால், என் அக்கா என்னிடம் நேரடியாக சொல்லவில்லை, என் மனைவியிடம் சொல்லி என் மனைவி

என்னிடம் சொன்னார். இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து பார்வையிட்டால் வழக்கு சொத்து விவரத்தில் கண்டுள்ள மின் இணைப்பு, வீட்டு கதவு எண் , குடியிருந்து வரும் வீடு என்பதும் தெரியவரும் என்றால் அன்றைய காலகட்டத்தில் அவ்வாறு இல்லை. இம்மின் இணைப்பானது குடியிருக்கும் வீட்டிற்கு கொடுக்கப்பட்டதா அல்லது மாட்டுக்கொட்டகைக்கு கொடுக்கப்பட்டதா என்பது பற்றி மின்சாரத்துறையினை அழைப்பாணை மூலம் விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 கிரய ஒப்பந்த ஆவணத்தில் சு.ப. செல்லையா வீட்டிற்கு கிழக்கே என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர் முத்துவிற்கும் என் அக்கா செல்லம்மாளிற்கும் இடையில்தான் பணம் கொடுக்கல் வாங்கல் உறவு இருந்தது, அந்த கொடுக்கல் , வாங்கல் சம்மந்தமாக என் அக்கா செல்லம்மாளின் வேண்டுகோளுக்கு இணங்க பெயரளவில் வா.சா.ஆ 1 கிரய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடமிருந்து வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டுமென்று வழக்கினை தாக்கல் செய்து பொய்யாக சாட்யம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 ஆவணத்தின்படி நான் பிரதிவாதியை அனுகவில்லை என்றாலும், கிரய ஆவணம் எழுதிக்கொடுக்க அழைக்கவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 1 ஆவணம் ஜாமீன் ஆவணம் என்பதால்தான் நான் பிரதிவாதிளை அவ்வாறு அணுகவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறு விசாரணை இல்லை.**